செய்தி வெளியீடு எண்:1307 நாள்:09.12.2021

## செய்தி வெளியீடு

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் 08.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2021-22 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு கூட்டத்தொடரில் இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள்.

**"பழங்குடியினர் நலத்துறையின் கீழ் கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி, தருமபுரி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய 7 மாவட்டங்களில் இயங்கும் 31 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 கழிப்பறைகள் தலா ரூ.7.00 இலட்சம் வீதம் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படும்".**

இவ்வறிவிப்பிற்கிணங்க, பழங்குடியினர் நலத்துறையின் கீழ் கோயம்புத்தூர், கள்ளக்குறிச்சி, தென்காசி, தருமபுரி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் நீலகிரி ஆகிய 7 மாவட்டங்களில் இயங்கும் 31 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப்பள்ளிகளில் 61 கழிப்பறைகள் மற்றும் திருப்பத்தூர் மாவட்டத்தில் செயல்படும் ஒரு வனத்துறை மேல்நிலைப் பள்ளிக்கு 4 கழிப்பறைகள் ஆக 65 கழிப்பறைகள் ரூ.4,85,49,507/- (ரூபாய் நான்கு கோடியே எண்பத்தைந்து இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து ஐநூற்று ஏழு மட்டும்) மதிப்பில் புதிதாக கட்டும் பொருட்டு, நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி **அரசாணை (நிலை) எண்:98, ஆ.தி.(ம)ப.ந. (ஆதிந2(1)) துறை, நாள் :30.11.2021-** ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**